முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏதோ விளக்கம் கேட்கிறார்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: வலியுறுத்திக் கடிதம் வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் சென்னையிலே இருக்கிற காரணத்தால், இதில் கால நீட்டிப்புத் தேவை; அதாவது last date-ஐ நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஒரு வார காலம் அவகாசம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்கள் அத்தனைபேரும் இங்கேயே இருந்து கொண்டிருக்கிறோம். ஒரு வார காலம் என்பது போதாது. செப்டம்பர் 30 வரையில் இந்தத் தேதியை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001-2002 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையிலே. முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

2001 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

"In pursuance of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, C. Rangarajan, Governor of Tamil Nadu hereby give my recommendations for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2001-2002."

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, 2001-2002 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2001-2002 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய 13-9-2001 ஆம் தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை முழுமையாக வழங்கப்பெறுகிறது.